## **Copy of Deposition**

**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**

**அசல் வழக்கு எண்.48/2019**

**வாதி தரப்பு சாட்சி:1**

| | |
|---|---|
| பெயர்: K.மகேஷ்(வா.சா.1) | ஜாதி: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | சமயம்: |
| தாலுக்கா: | வயது: |

**2024ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3ம் நாள் செவ்வாய்கிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் எழுத்தர் ம.பெரியசாமி அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா:-1 முதல் விசாரணை:-**

வா.சா.1 ஆகிய நான் இந்த அசல் வழக்கில் 1ம் வாதி ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களான

1) 18.01.2013ம் தேதியிட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ. 1ஆகவும்**

2) 29.07.2013ம் தேதியிட்ட கிரய பத்திரத்தின் சார்பதிவக சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆகவும்**

3)07.03.2019ம் தேதியிட்ட K.R. சந்திரசேகர் பெயரில் உள்ள சொத்து வரி இரசீது அசல் **வா.சா.ஆ. 3 ஆகவும்**

4)15.05.2017ம் தேதியிட்ட K.M. ராம்சந்திரஅய்யர் பெயரில் உள்ள மின்கட்டண இரசீது அசல் **வா.சா.ஆ. 4 ஆகவும் வாதி தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்து கொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.**

**வா.சா. – குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு):-**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

VELLINGIRI LOGANATHAN

Digitally signed by VELLINGIRI LOGANATHAN
Date: 2024.09.03 17:01:00 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.